# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,933 — 1932 ம் ௵ ஆடி ௴ 1 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கத் திருஸ்தல யாத்திரைச் சட்டம்.**

தலைவில்லிலுள்ள சந்தான நாயகியின், கோவில் திருவிழா சம்பந்தமாக உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

உத்தம தேசாதிபதியவர்களால் "திருஸ்தல யாத்திரைச் சட்டம்" எனப் பெயர் பூண்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட ஒழுக்க விதிகள்.

உத்தமனரவர்கள் கட்டளைப்படி,
டீ. பீ. ஜயதிலக,
கௌரவ உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள்.

உள்நாட்டு அரசியல் மந்திரியவர்கள் கந்தோர்.
கொழும்பு, 1932 ம் ௵ ஜூன் ௴ 27 ந் திகதி.

#### ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்றவசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய இடத்தைக் கருதும்.

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும், தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப்பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்து வியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப் பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

173 — J. N. 21634—120 (6/32)

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தையல்லது கணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக் வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தையல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண்போறனை, சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதி ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக் கூடியதாய் எக்கட்டடத்தையும் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதி பெறாமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்கு மிடங்களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடைய வர்களாயிருத்தல் வேண்டும்.

### இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு : தலைவில்லு ஓடை ;

தெற்கு ; எத்தால தலைவில்லு, தேவிக்குடா தலைவில்லு அடிப்பாதைகள் எறும்புக்குடலில் வந்து சேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப் புறமாகக் கடலுக்குப்போகும் அடிப்பாதை ;

கிழக்கு : பண்டாரம் கருக்குவச்சாம் பெரிய தோட்டம் வழிகள் :

மேற்கு : கடல்.

### 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின்படி கழுத்துறை நகரசங்க பிரிவு எல்லைக்குரிய வித்தியாபரிபாலன சபையால் செய்யப்பட்டு வித்தியா சங்கத்தின் அங்கீகாரம் பெற்று 1931 ம் ஆண்டின் இலங்கை (இராச்சிய மந்திரசபை) ஆலோசனைச் சபையிற்செய்த கட்டளையின் 93 ம் பிரமாணப்படி அவர் வைக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு உத்தம தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனார் கட்டளைப்படி,
சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா,
வித்தியாமந்திரி.

வித்தியாமந்திரி கந்தோர்,
கொழும்பு 1932 ம் வரு ஜூன்மீ 22 ந் திகதி.

### உபவிதி.

1926 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 22 ந் தேதியைக்கொண்ட 7,552 ம் இலகக கவண்மேந்துக் கெசெற் பத்திரிகையில் 1926 ம் ஆண்டு ஒக்டோபர்மீ 20 ந் தேதியைக்கொண்டு பிரசுரிக்கப்பட்ட உபவிதிகளின் 2 ம் உபவிதி இத்தால் நிவாரணமாக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது சேர்த்துக் கொள்ளப்படுகின்றது :—

"6 வயசுக்குக் குறையாத அல்லது 14 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுவனின் பெற்றோரும் 6 வயசுக்குக் குறையாத அல்லது 12 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுமியின் பெற்றோரும் அச்சிறுவன் சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்குகள் செய்திருந்தாலொழிய அல்லது பாடசாலைக்குப் போகாதிருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தாலொழிய அச்சிறுவனை அல்லது சிறுமியைப் பாடசாலைக்குப் போகச் செய்யவேண்டும். ஆயின் 10 வயசுக்கு மேற்பட்ட முஸ்லீம் அல்லது தமிழ்ச் சிறுமிகளின் விஷயத்தில் அவ்வித வரவு கட்டாயமானதல்ல. மேலும், 8 வயசுக்குக் கீழான சிறுவனாவது சிறுமியரிலெவராவது தத்தம் வாசஸ்தலத்திலிருந்து $1\frac{1}{2}$ கட்டை தூரத்துக் கப்பாலுள்ள பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமில்லை. இன்னும் 8 வயசுக்கு மேற்பட்ட சிறுவன் 2 கட்டை தூரத்துக்கப்பாலுள்ள பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமுமில்லை."

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்,

1876 ம் வரு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பன்னிப்பிற்றிய றெயில்வே டேசனுக்குப் போகும் றோட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 20,382. குறிச்சி—தெபானமவும் பன்னிப்பிட்டியும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வல்யம்புககவத்த .. | தோட்டம், 4 பலாவும், 1 தென்னையும், 1 தோம்பவும், 4 தோடையும், 1 மாவும், 58 கமுகுவும், ஒரு ஓலைக் கொட்டிலுமுள்ளது | மொறவாககே சைமன் பெறிறு, மொறவாக்கே மெனிக்கா பெறிறு, மொறவாக்கே சாள்ஸ் பெறிறு. வித்தனகே சாள்ஸ் பெறிறுவும், வேலுன் பெறிறுவின் உரித்தாளரும், பன்னிப்பிட்டி | 0 0 14·1 |
| 5 | தேல்ககவத்த அல்லது தேல்ககாத்த | தென்னங்காணி, 2 தென்னையும் 1 பலாவுமுள்ளது | கொத்தகே சர்னேலிஸ் பெறிறு, பன்னிப்பிட்டி | 0 0 9·4 |
| 7 | வல்யம்புககவத்த .. | தென்னங்காணி, 3 தென்னையும் 3 கமுகுவும், 1 பெல்லி மரமும், 2 தோடையும், 2 யாம்புவும், ஒரு ஓலைக்கொட்டிலு முள்ளது | தலுகம ஆச்சாறிகே தோனு எங்கல்தீனு, தலுகமா ஆச்சாறிகே சிசா, மாந்த ஆச்சாறிகே தர்மபந்து, பன்னிப்பிட்டி, ஜே. பி. டி. விவுறு. வெள்ளவத்தை | 0 0 12·7 |

எடுத்துக்கொள்வதற்கான ஒத்தனஞ்செய்யும்படி 1876 ம் வரு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் வரு ஆவணி மாசம் 15 ந் தேதியிலன்று $9\frac{1}{2}$ மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1932 ம் வரு ஆனிமீ 23 ந் வ.

ஈ. எச். ஆர். டெனிசன்.
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புகைரதப் பகுதியாரால் எடுக்கப்பட்ட நிலத்திற்கு முடி உரித்துப்பெறுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,194. குறிச்சி—கஹட்டப்பிட்டியா, கங்கபஹலகோறளை; உடப்பலாத்தை, கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | — | வெளியான வெறு நிலம் | கம்பனியிலிருக்கும் ஓமார் பாச்சா | 0 0 21·37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஜுலை மாசம் 29 ௳ தேதியிலன்று பின்னேரம் 2.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ ஜுன்மீ 24 ௳.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முடிக்கு நத்தறம்பொத்த சிங்களக் கலவன் பாடசாலையின் உரித்துப் பெறுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,205. குறிச்சி—நத்தறம்போத்த, உடகம்பகா கோறளை, பாததும்பற, கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | அஸ்வெதும அல்லது கிறிமெத்தியாவத்த | தோட்டம், ஓட்டினால் வேயப்பட்ட கற் கட்டடப் பள்ளிக்கூடமும், உபாத்திமார்கள் வசித்தற்குரிய கட்டடமும், பிறவுங்கொண்டது | குந்தசாலெ விகாறெயினது பராமரிப்புக்காரர்கள், முக்கிய பராமரிப்புக்காரர் : மேதங்கற உன்னான்செ அவர்கள் | 0 2 35·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதிவவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஜுலை மாசம் 29 ௳ தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ ஜுன்மீ 23 ௳.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கண்டி ஸ்டேசனில் மாத்தளைப் புகைரத வீதியில் வண்டிகள் விடும் திட்டத்தோடு யொடர்பான பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9.123. குறிச்சி—குதுகும்பொல, கங்கவத்த கோறளை, யற்திறுவற, கண்டி முனிசிப்பல் எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மதக்கும்புற | புல்வயல் | ஏ. ரிக்கிறிமெனிக்கா, குதுகும்பொல | 0 0 9·8 |
| 2 | ஷை | புல்வயல் | சீ. சீ. அபெவீர, கண்டி. | 0 0 37·3 |
| 3 | ஷை | தோட்டம் | ஷை | 0 1 15·1 |
| 4 | அத்தனைக்கதெதறவத்த | தோட்டம் | ஏ. எம். பிசோமெனிக்கா, குதுகும்பொல | 0 0 17·9 |
| 5 | ஷை | புல்வயல் | ஷை | 0 0 12·9 |
| 6 | கங்காணக்கும்புற | புல்வயல் | ஏ. என். பி. வித்தியசேகர, கட்டுகெலெ | 0 0 10·9 |
| 7 | ஷை | பாழ்நிலம் | ஷை | 0 0 16·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵ த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ௵ ஆகஸ்டு மாசம் 5 ௳ தேதியிலன்று பின்னேரம் 2.15 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ ஜுன்மீ 28 ௳.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஞெசெல்ல றெயில்வே ஸ்டேசனுக்குப் போகும் ஒரு பாதை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,185. குறிச்சி—வத்தவல, ஞெசெல்ல, அம்பகமுவா கோறளை, உடபுலத்கம, கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகலறயா எஸ்ரேற் | தேயிலை | கொழும்பு கார்சன் கொம்பனிக்காரர், ஏசண்டுகள் | 0 | 1 | 23·4 |
| 2 | — | பாதை | ஷை | 1 | 0 | 3·7 |
| 3 | அகறலயா எஸ்ரேற் | தேயிலை | ஷை | 0 | 0 | 3·7 |
| 4 | ஷை | தோட்டம் | ஷை | 0 | 0 | 10·1 |
| 5 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 5·2 |
| 6 | ஷை | பத்தன | ஷை | 0 | 1 | 22·4 |
| 8 | அபெர்கெல்டீ எஸ்ரேற் | தேயிலை | ஸ்கொற்றிஷ் சிலோன் ரீ கொம்பெனி, எம். எல். உவில்கன்ஸ், ஹற்றன், மனேஜர் | 1 | 0 | 28·1 |
| 9 | — | பாதை | ஷை | 2 | 0 | 22 |
| 11 | அபெர்கெல்டீ எஸ்ரேற் | பத்தன | ஷை | 0 | 1 | 4·7 |
| 12 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 11·9 |
| 13 | ஷை | பத்தன | ஷை | 0 | 0 | 35·2 |
| 14 | ஷை | தேயிலை | ஷை | 0 | 1 | 34 |
| 15 | — | பழைய பிறைடில் பாதை | ஷை | 0 | 0 | 0·4 |
| 16 | அபெர்கெல்டீ எஸ்ரேற் | வெறுநிலம் | ஷை | 0 | 0 | 0·7 |
| 18 | பின்லயா எஸ்ரேற் | வெறுநிலம் | இம்பீரியல் சிலோன் ரீ எஸ்ரேற்ஸ்; கொழும்பு உவிற்றல் கொம்பெனிக்காரர், ஏசண்டுகள் | 0 | 0 | 0·7 |
| 19 | — | பழைய பிறைடில் பாதை | ஷை | 0 | 0 | 0·5 |
| 20 | பின்லயா எஸ்ரேற் | தேயிலை | ஷை | 0 | 0 | 20·1 |
| 22 | அபெர்கெல்டீ எஸ்ரேற் | டெனியா | ஸ்கொற்றிஷ் சிலோன் ரீ கொம்பெனி, எம். எல். உவில்கன்ஸ், ஹற்றன், மனேஜர் | 0 | 0 | 17·2 |
| 23 | — | பழைய பிறைடில் பாதை | ஷை | 0 | 0 | 1·1 |
| 24 | பின்லயா எஸ்ரேற் | தோட்டம் | இம்பீரியல் சிலோன் ரீ எஸ்ரேற்ஸ், கொழும்பு உவிற்றல் கொம்பெனிக்காரர், ஏசண்டுகள் | 0 | 0 | 3·4 |
| 25 | — | பாதை | ஷை | 0 | 0 | 15·2 |
| 28 | — | பாதை | ஷை | 2 | 1 | 34·2 |
| 29 | பின்லயா எஸ்ரேற் | தேயிலை | ஷை | 0 | 0 | 3·6 |
| 30 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 4 |
| 31 | ஷை | பத்தன | ஷை | 0 | 0 | 5·9 |
| 32 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 4·3 |
| 33 | ஷை | வெறுநிலம் | ஷை | 0 | 0 | 10 |
| 34 | ஷை | தோட்டம் | ஷை | 0 | 0 | 7·1 |
| 35 | ஷை | தோட்டம் | ஷை | 0 | 0 | 2·3 |
| 36 | ஷை | டெனியா | ஷை | 0 | 0 | 4·4 |
| 37 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 2·9 |
| 38 | ஷை | தோட்டம் | ஷை | 0 | 0 | 4·5 |
| 39 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 5 |
| 40 | ஷை | தோட்டம் | ஷை | 0 | 0 | 17·2 |
| 41 | ஷை | தேயிலை | ஷை | 0 | 1 | 30·7 |
| 42 | ஷை | தேயிலை | ஷை | 0 | 1 | 17·6 |
| 43 | ஷை | பத்தன | ஷை | 0 | 0 | 10·5 |
| 44 | ஷை | பத்தன | ஷை | 0 | 1 | 30·5 |
| 45 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 12·8 |
| 46 | ஷை | பத்தன | ஷை | 0 | 0 | 28·4 |
| 47 | ஷை | புதிதாய்த் திருத்தப்பட்ட நிலம் | ஷை | 0 | 1 | 3·9 |
| 48 | ஷை | தேயிலை | ஷை | 0 | 1 | 7·7 |
| 49 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 23·2 |
| 52 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 21·4 |
| 53 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 15·3 |
| 60 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 10·4 |
| 61 | — | பாதை | ஷை | 0 | 0 | 10·3 |
| 62 | பின்லயா எஸ்ரேற் | தேயிலை | ஷை | 0 | 0 | 7·1 |
| 69 | ஷை | வெறு நிலம் | ஷை | 0 | 0 | 0·5 |
| 70 | ஷை | தேயிலை | ஷை | 0 | 0 | 6·9 |
| 71 | — | பாதை | ஷை | 0 | 0 | 5 |
| 78 | பின்லயா எஸ்ரேற் | பத்தன | ஷை | 0 | 0 | 16 |
| 81 | — | பாதை | ஷை | 0 | 0 | 4·9 |
| 86 | — | பாதை | ஷை | 0 | 0 | 12·9 |
| 89 | — | பாதை | ஷை | 0 | 0 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணி மாதம் 5 ந் தேதியிலன்று பின்னேரம் 2.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடகதைகளினது தன்மையையும் அவ்வுடங்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ஹூ ஜூன்மீ 27 ந் வ.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ௵ 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சந்தணங்கமவத்தக் கல்குழிக்கு போகும் பொருட்டு ஓர் வழியைப் போடவேண்டும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,737. குறிச்சி—சந்தணங்கம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பந்துருவேவத்த .. | தென்னந்தோட்டம், 68 தென்னமரங்களிருக்கின்றன, வயசு 1-30 வருடங்கள் | டபிள்யு. எஸ். சீ பரநாந்து அவர்கள் | 1 0 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்தக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ௵ ஆவணி மாசம் 4 ௳ தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு சிலாபத்துக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளங் கச்சேரி,
1932 ௵ ஆனி ௴ 23 ௳.

ஈ. ஆர். செற்பதி.
வதில் உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெல்மதுள நகர இடுகாட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை அஃதாவது:—

பிரதமபடத்து இல. 195 ம் நி. 2 ம் துண்டு. குறிச்சி—தெனவக்க உடக்கட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விலாசம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 162 | கலேபிற்றகேன அல்லது கல்கொடகேன | கமுகும், பிலாவுமுள்ள சேனை | ஓ. எல். எம். சாலி, ஓ. எல். எம். அப்துல் காதர் கலுத்துறை | 2 2 37·4 |
| 162B | மக்கும்புறேகொட அல்லது மக்கும்புறே கொடகாலல | கெக்குண மரமுள்ள சேனை | கே. மித்துருகாமி, கே. பி. றம்மல்காமி, கே. பி. டிலோகாமி, உமறங்காபிறதிய, பெல்மதுள | 0 1 21·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 மபிரிவின் ஏறபாடுகளின் பிரகாரம தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால், அககாணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைக கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுககு உரித்துப்பேசுகின்ற சகலரும தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ௵ ஆடி மாசம் 28 ௳ தேதியிலன்று முற்பகல் ஒன்பதரை மணிக்கு பெல்மதுள வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுககொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ௵ ஆனி ௴ 27 ௳.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாஹின்கண்டையில் ஸ்தாபிக்க உத்தேசிக்கும் புதுப் பள்ளிக்கூடத்துக்கு என்னும் பகிரங்கதேவைககு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 4,176. குறிச்சி—மாகின்கண்ட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மில்லகஸ்துலகேன .. | தோட்டம் .. | எம். திசன்காமி .. | 0 3 25·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால் அககாணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ௵ ஆவணி மாசம் 9 ௳ தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு தெரணியகலயில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1932 ௵ ஆனி ௴ 23 ௳ திகதி.

ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.